**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
TIRUVANNAMALAI.**
**OS No.249/2022**

**18.02.2026 வா.சா.2 கண்ணன் த/பெ. வேடியப்பன்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

பொதுஅதிகாரப்பத்திரத்தில் சாட்சிகளாக கையொப்பம் செய்தவர்கள் யார் என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. அவர்கள் எனக்கு பரிட்சயம் இல்லாதவர்கள் என்று சொன்னால் சரிதான். நான் என் மனைவியுடன் ஏற்படுத்திக்கொண்ட கிரைய பத்திரத்தின் சாட்சிகள் யார் என்றால் ஒருவர் சேகர். மற்றொருவர் பெயர் ஞாபகம் இல்லை. சாட்சி சேகர் திருவண்ணாமலையை சேர்ந்தவர். சாட்சிகளை என் பெரிய மகன் சேகர் அழைத்து வந்தார். பொதுஅதிகாரப்பத்திரம் ஏற்பட்ட தேதியிலேயே என் மகன் மணிகண்டனுடன் ஒரு கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். அதில் சாட்சிகள் யார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டோம். அந்த ரத்து பத்திரத்தில் யார் சாட்சிகள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என் மனைவிக்கு கிரைய பத்திரம் எழுதப்பட்ட அன்றைய தேதியிலேயே இதர சொத்துக்கள் சம்மந்தமாக என் மகன் சேகருடன் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரிதான். சேகருடன் ஏற்பட்ட ஒப்பந்தத்திலும் யார் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. உண்மையிலேயே என் மனைவிக்கு கிரையம் கொடுக்கவேண்டும் என்றால் அவர் சகோதரர் செல்வதுரை நேரடியாக கிரையம் கொடுத்திருக்கலாம் என்றும் நான் கடன் பொறுப்புக்காக அதிகாரப்பத்திரத்தை எழுதிக்கொண்டு பின்னிட்டு என் மகன் பெயரில் கிரைய ஒப்பந்தமும் என் மனைவி பெயரில் கிரையமும் மோசடியாக செய்து கொண்டேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். அதிகாரப்பத்திரத்திலும் கிரையபத்திரத்திலும் பொதுவான ஜக்குபந்திகளை காண்பித்து 1/3 பிரிக்கப்படாத பாகம் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் நான் என் மனைவிக்கு கொடுத்த சொத்தை உட்பிரிவு செய்திருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் என் மனைவியின் பெயரில் வாங்கிய பட்டாவும் தவறான அடிப்படையில் பெறப்பட்டது என்றால் சரியல்ல. பட்டா பெறுவதற்கு முன் வருவாய்

துறையை சேர்ந்த அலுவலர்கள் அந்த இடத்தை பார்வையிட்டு பட்டா வழங்கினார்கள் என்றால் பார்வையிட்டுதான் பட்டா கொடுத்தார்கள். அது சம்மந்தமான ஆவணங்கள் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் வைத்துள்ளேன். தாவா சொத்தை செல்வதுரை இரண்டு சர்வே எண்களில் உள்ள சொத்தை தன் 3 மகன்களுக்கு தனித்தனியாக பிரித்து வைத்து 3 மகன்களும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் செல்வதுரைக்கு கொடுத்த ரூ.4,00,000/- கடனை செல்வதுரை என் மகன் சேகரிடம் திருப்பி பைசல் செய்து அதற்கு ரசீதும் வைத்துள்ளார் என்றால் அது அனைத்தும் பொய். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 2 பொது அதிகாரப்பத்திரத்தில் ஒட்டப்பட்டுள்ளது என் மகன் சேகரின் புகைப்படம் என்றால் சரிதான். நான் தவறாக பத்திரங்களை உருவாக்கிக்கொண்டு என் மனைவிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை நான்தான் நடத்துகிறேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.